**வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை : திருமதி. எஸ். மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,**

**ந.க.எண்.1370/கலை/ஒபக/2023 நாள்: 29.08.2023**

| | |
|---|---|
| பொருள் : | ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - வேலூர் மாவட்டம் - கலைப் பண்பாட்டுத் திருவிழா (KALA UTSAV) 2023-24 - பள்ளி, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் போட்டிகள் நடத்துதல் - வழிகாட்டுதல்கள் வழங்குதல் - சார்ந்து. |
| பார்வை : | மாநில திட்ட இயக்குநர் கடிதம் ந.க.எண். ACE/159/கலை/ஒபக/2023, நாள்: 23.08.2023 |

*************

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம், அனைத்து வகை பள்ளிகளில் இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் (IX-XII) பயிலும் மாணவர்களது படைப்பாற்றலை வளர்க்கவும், நமது பாரம்பரிய கலைகளை உயிர்ப்புடன் வைத்திருக்கவும், வாய்பாட்டிசை, கருவியிசை, நடனம், காட்சிக் கலை (Vocal music Instrumental music, Dance, Visual Arts) மற்றும் தனி நடிப்பு எனும் ஐந்து பெருந்தலைப்புகளில் கலைப் பண்பாட்டுத் திருவிழா போட்டிகள் (KALA UTSAV) நடத்தப்பட்டு வருகிறது. இந்தக் கல்வியாண்டில் (2023-2024) இப்போட்டிகளை பள்ளி, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நடத்திட அனுமதிக்கப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>கலை வடிவங்கள் - 2023-24</u>**

2023-24 ம் ஆண்டுக்கு கலைப்பண்பாட்டுத் திருவிழா போட்டிகள் அனைத்து (அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார்) பள்ளிகளில் நடத்திட தேவையான வழிகாட்டு நெறிமுறைகள் மத்திய கல்வி அமைச்சகத்திடமிருந்த பெறப்பட்டு பின்வருமாறு வழங்கப்படுகிறது. இப்போட்டிகள்யாவும் கீழ்காணும் 10 கலை வடிவங்களில் மாணவ மற்றும் மாணவிகளுக்கென தனித்தனியே நடத்திடல் வேண்டும்.

| வ.எண். | கலை வடிவங்கள் |
|---|---|
| 1 | வாய்ப்பாட்டு இசை – செவ்வியல் (Vocal Music – Classical) |
| 2 | வாய்ப்பாட்டிசை பாரம்பரிய நாட்டுப்புற வகை (Vocal Music – Traditional Folk) |
| 3 | கருவி இசை - தாள வாத்தியம் (Instrumental Music – Percussive) |
| 4 | கருவி இசை – மெல்லிசை (Instrumental Music – Melodic) |
| 5 | நடனம் – செவ்வியல் (Dance – Classical) |
| 6 | நடனம் – பாரம்பரிய நாட்டுப்புற வகை (Dance – Folk) |
| 7 | காட்சிக் கலை (இருபரிமாணம்) (Visual Arts (2-Dimensional)) |
| 8 | காட்சிக் கலை (மூன்று பரிமாணம்) (Visual Arts (3-Dimensional)) |
| 9 | உள்ளூர் தொன்மை பொம்மைகள் – விளையாட்டுகள் (Indigenous Toys and Games) |
| 10 | நாடகம் (தனி நபர் நடிப்பு) (Drama (Solo Acting)) |

<u>போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகுதிகள்</u>:

- அனைத்து அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் IX, X, XI மற்றும் XII வகுப்பு மாணவ மற்றும் மாணவிகள் பங்கேற்கலாம்.
- தமிழகத்தில் உள்ள பிற மத்திய அரசு அமைப்புகள் / உள்ளாட்சி அமைப்புகளில் தனியார் பள்ளிகள் மற்றும் பிற பள்ளிகளிலும் (மத்திய திபெத்திய பள்ளி நிர்வாகம், NCERT, ரயில்வே, BSF, CRPF, ராணுவம், விமானப்படை, கண்டோன்மென்ட் வாரியங்கள், NDMC, KGBV, ஏக்லவ்யா பள்ளிகள், பல்நோக்கு பள்ளிகள் (DMS) போன்றவை) இணைந்து மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்கலாம். மேற்கூறப்பட்ட அனைத்து பள்ளிகளும் மாவட்ட மற்றும் மாநில அளவில் பங்கேற்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- கலைப்பண்பாட்டுத் திருவிழாவின் முந்தைய ஆண்டுகளில் வெற்றி பெற்றவர்கள் (1வது, 2வது மற்றும் 3வது இடம்) இவ்வாண்டு நடைபெறும் கலை பண்பாடு திருவிழா போட்டிகளில் (2023-24) பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- பள்ளி ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ் போட்டிகளுக்கு தயாராகும் மாணவர்-கலைஞர்கள் மட்டுமே இப்போட்டிகளில் பங்கேற்க முடியும்.
- தொழில்முறை கலைஞர்கள் / நடிகர்களின் பங்கேற்ப அனுமதிக்கப்பட மாட்டாது.
- ஒரு மாணவர் ஒரு கலைப் பிரிவில் மட்டுமே பங்கேற்க முடியும்.
- அனைத்து வகை சிறப்புத் தேவையுடைய மாணவர்களையும் (CWSN) ஊக்கபடுத்தி ஆர்வமுடன் பங்கேற்பதை ஊக்குவித்தல் வேண்டும்.

- எனவே, ஒவ்வொரு மாநிலமும் 10 கலை வடிவங்களில் 10 ஆண் மற்றும் 10 பெண் பங்கேற்பாளர்களை உள்ளடக்கிய மொத்தம் 20 பதிவுகளை சமர்ப்பிக்க கோரப்பட்டுள்ளது. எனவே, மாவட்ட அளவில் அவ்வாறே 10 கலை வடிவங்களில் 10 ஆண் மற்றும் 10 பெண் பங்கேற்பார்வைகளை உள்ளடக்கிய மொத்தம் 20 வெற்றியாளர்களை தெரிவு செய்தல் வேண்டும். அவ்வாறே மாநில அளவிலான போட்டிகளிலும் தெரிவு செய்து தேசிய அளவில் பங்கேற்க செய்தல் வேண்டும்.
- போட்டிகள் நடத்துதல் சார்ந்து பிற வழிகாட்டுதல் இணைப்பு-II ல் இணைக்கப்பட்டுள்ளது.

<u>தேசிய அளவிலான கலை பண்பாட்டு திருவிழா - 2023-24:</u>

தேசிய அளவிலான கலை பண்பாட்டு திருவிழா (2023-24) நேருக்கு நேர் முறையில் நடத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது. வெவ்வேறு பிரிவுகளில் நடைபெறும் போட்டிகளின் இடம் மற்றும் அட்டவணை (இறுதிப்படுத்தப்பட்டதும்) அனைத்து மாநிலங்களுக்கும் பின்னர் தெரிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பள்ளி அளவிலான போட்டிகள் கீழ்காணும் அட்டவணைப்படி நடத்திடல் வேண்டும்.

| வ.எண் | செயல்பாடு | காலவரம்பு |
|---|---|---|
| 1 | பள்ளி அளவில் | 05.09.2023 முதல் 08.09.2023 வரை |

<u>விருதுகள்</u>

தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறும் மாணவ / மாணவிகளுக்கு (1வது, 2வது மற்றும் 3வது) ரொக்கப் பரிசு, கோப்பை மற்றம் பதக்கம் வழங்கப்படும். பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் தேசிய அளவிலான பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்படும். ஒவ்வொரு கலை வடிவங்களிலும் வழங்கப்படும் ரொக்க விருதுகள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | = | ரூ. 25,000/- |
| இரண்டாம் பரிசு | = | ரூ. 20,000/- |
| மூன்றாம் பரிசு | = | ரூ. 15,000/- |

<u>தேசிய அளவிலான போட்டிகளுக்கு விண்ணப்பித்தல்:</u>

தேசிய அளவிலான போட்டிகளில் விண்ணப்பித்தல் மூன்று கூறுகளைக் கொண்டது. அவைகளான : நுழைவு

1. பதிவு மேற்கொள்ளுதல்

2. மாநில அளவிலான போட்டிகளின் காணொளி தொகுப்பு இணைத்தல்
3. 100 வார்த்தைகளுக்கு மிகாமல் உரைச்சுருக்கம் சமர்பித்தல் – தேர்ந்தெடுக்கப்பட்ட கலை வடிவம், அதன் பிறப்பிடம், நடைமுறையில் பயன்படுத்தும் சமூகங்கள், கலை வடிவம் நிகழ்த்தப்படும் சிறப்பு நிகழ்வுகள், உடைகள், அதனுடன் இணைந்த கருவிகள், சுற்றுச்சூழலுடனான அதன் தொடர்பு, அதன் பாணி, நுட்பங்கள் மற்றும் பயன்படுத்தப்படும் பொருள்கள் பற்றிய விவரங்கள் உரைச் சுருக்கத்தில் அடங்கும்.
4. எனவே மாநில அளவிலான போட்டிகள் நடைபெறும் போது மேற்காண் விவரங்கள் பெறப்பட்டு மாநிலத் திட்ட இயக்ககத்திற்கு சமர்பிக்க வேண்டும்.

கலைப் பண்பாட்டுத் திருவிழா 2023-2024 இன் வழிகாட்டுதல்கள்படி எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வண்ணம் மாணவ / மாணவிகளை தெரிவு செய்து குறிப்பிட்ட தேதிக்குள் பள்ளி அளவில் நடைபெறும் போட்டிகளின் முடிவுகளை 11.09.2023 மாலை 4.00 மணிக்குள் மாவட்ட திட்ட அலுவலகம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, காந்தி நகர், (SSA Office)-ல் சமர்பிக்க வேண்டுமென அனைத்து வகை தலைமையாசிரியர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம் – 6

இணைப்பு

போட்டிகள் நடத்துவதற்கான பிற வழி முறைகள்.

பெறுநர்

அனைத்து வகை அரசு / அரசு உதவி பெறும் / ஆதி-திராவிட / நகராட்சி / மெட்ரிக் உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்.

நகல்:

1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்
அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம்.
3. மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்), வேலூர் மாவட்டம்.